# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### பாராளுமன்றத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் இந்திய விஜயம்

இலங்கை பாராளுமன்றத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் 15 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர்கள், அனுபவக் கற்றல் விஜயமாக 2026 மார்ச் 22 முதல் 27 ஆம் திகதி வரை இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இப்பேராளர்களில் 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் 3 பாராளுமன்ற உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியிருந்தனர். இலங்கை பாராளுமன்றத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் எம்.பி அவர்கள் இப்பேராளர்கள் குழாமுக்கு தலைமைதாங்கினார். இந்த ஒருவார கால விஜயத்தின் அங்கமாக புதுடில்லி மற்றும் மும்பையில் சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்தன. இந்தியாவின் நிறுவக கட்டமைப்புகள். கொள்கை ரீதியான அணுகுமுறைகள் மற்றும் புதிய மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் சிறந்த நடைமுறைகள் தொடர்பான புரிதலை வழங்குவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

2. புதுடில்லியில் லோக் சபாவின் கௌரவ சபாநாயகர் ஸ்ரீ ஓம் பிர்லா மற்றும் இந்திய வெளிவிவகார செயலர் ஸ்ரீ விக்ரம் மிஷ்ரி ஆகியோரை சந்தித்த இப்பேராளர்கள் அவர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டிருந்தனர். இந்தியாவின் பாராளுமன்ற முறைமை மற்றும் குழுக்களின் செயற்பாடுகள் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி, ஜனநாயகத்துக்கான பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட திசைமுகப்படுத்தல் அமர்வும் இதில் உள்வாங்கப்பட்டிருந்தது. இப்பேராளர்கள், போக்குவரத்து, சுற்றுலா மற்றும் கலாசாரம், மற்றும் வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியல் குழுக்களுடன் கலந்துரையாடியதுடன், சட்டசபை குறித்தும் ஆட்சி முறைமை தொடர்பாகவும் கருத்து பரிமாற்றங்களையும் மேற்கொண்டிருந்தனர். அத்துடன் இந்தியப் பாராளுமன்றத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட இந்திய-இலங்கை பாராளுமன்ற நட்புறவுக் குழுவையும் அவர்கள் சந்தித்தனர்.

3. இந்தியாவின் உட்கட்டமைப்பு முயற்சிகள் குறித்த புரிதலை ஏற்படுத்தும் விதமாக பிரதமர் கதி சக்தி மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய முன்னோடி திட்டங்கள் தொடர்பாக இப்பேராளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகள் அதிகார சபை, இந்திய சூரிய மின்சக்தி கூட்டுத்தாபனம், புதுடில்லி மாநகர சபையின் ஸ்மாட் சிட்டி லிமிட்டட் மற்றும் டில்லி மெட்ரோ ரயில் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கும் அவர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர். உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்குப் பரிமாணத்தையும் உத்வேகத்தையும் சேர்ப்பதில் பொது-தனியார் பங்குடைமையின் வகிபாகத்தினை சுட்டிக்காட்டும் வகையில், இந்தியத் தொழில் கூட்டமைப்பினால் உரிய பங்குதாரர்களுடன் வட்டமேசை கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

4. மும்பையில இப்பேராளர்கள், அடல் சேது பாலம், ஜவஹர்லால் நேரு துறைமுகம், நவி மும்பை சர்வதேச விமான நிலையம் மற்றும் பவர் எக்ஸ்சேஞ்ச் இந்தியா லிமிட்டெட் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தனர். இந்த விஜயங்கள், இந்தியாவில் தரை, வான், கடல் மற்றும் எரிசக்தி ஆகிய பரிமாணங்களில் இணைப்பு ரீதியான உட்கட்டமைப்பில் நடைபெற்று வரும் மாற்றத்தை காண்பித்திருந்தன. மேலும், மகாராஷ்டிரா சட்டசபையின் கௌரவ சபாநாயகர் மற்றும் மகாராஷ்டிரா சட்டப் பேரவையின் கௌரவ தலைவர் ஆகியோரும் இப்பேராளர்களை வரவேற்று, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பில் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள் குறித்த கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.

5. பாராளுமன்ற தொடர்புகளை வலுவாக்கவும் அபிவிருத்தி அனுபவங்களை பகிரவும் இந்தியா மற்றும் இலங்கையின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை இந்த விஜயம் பிரதிபலிக்கின்றது. அத்துடன் இந்து சமுத்திரத்திலும் இரு நாடுகள் இடையிலும் ஸ்திரமான அபிவிருத்தியினை முன்கொண்டுசெல்வதில் ஆளுமை விருத்தி மற்றும் நிறுவன ரீதியான ஒத்துழைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் இவ்விஜயம் வலியுறுத்துகின்றது.

******

கொழும்பு
28 மார்ச் 2026